# 21.SITUATION RELATED PROBLEMS
## AGE RELATED PROBLEMS

1. ராமுவின் வயதானது சோமுவின் வயதினைப் போன்று இரு மடங்கு. சோமுவின் வயதானது கோபுவின் வயதில் பாதி ஆகும். மேலும், கோபுவின் வயது சோமுவின் வயதினை விட 10 வருடங்கள் அதிகம் எனில் சோமு மற்றும் கோபுவின் வயதுகள் முறையே,

1) 5, 10     2) 10,20
3) 10, 15     4) 20, 10

2. குமாரின் வயது அவரது சகோதரியை விட 5 மடங்கு அதிகம். அதே வேளையில் சகோதரி லதா அவரது சகோதரன் ராகவை விட 2 வயது இளையவர். ராகவின் வயது 10 எனில், குமாரின் வயது என்ன?

1) 56     2) 42
3) 40     4) 35

3. தந்தையின் வயது தாயின் வயதை விட 8 ஆண்டுகள் அதிகம் மற்றும் தாயின் வயதானது, மகனின் வயதில் 4 மடங்கு ஆகும். தற்போது மகனின் வயது 8 ஆண்டுகள் எனில், பிறந்த போது, தந்தைக்கு என்ன வயதாக இருந்திருக்கும்?

1) 32 ஆண்டுகள்     2) 36 ஆண்டுகள்
3) 40 ஆண்டுகள்     4) 35 ஆண்டுகள்

4. $A$ -யின் வயது $B$ -யின் வயதை விட 2 ஆண்டுகள் அதிகம். $B$ -ன் வயது $C$ -ன் வயதில் இரு மடங்கு. $A, B$ -மற்றும் $C$ ஆகியோரின் வயதுகளின் கூடுதல் 27 வருடங்கள். எனில், $B$ -ன் வயது யாது?

1) 7 வருடங்கள்     2) 8 வருடங்கள்
3) 9 வருடங்கள்     4) 10 வருடங்கள்

5) ரமேஷ் மற்றும் வினோத்தின் வயதுகளின் விகிதம் 4 : 3, 6 வருடங்களுக்குப் பிறகு ரமேஷின் வயது 26 வயதாக இருந்தால், வினோத் தற்போதைய வயது என்ன?

1) 11     2) 15
3) 14     4) 13

6) ஹர்சினியின் தந்தையின் வயது அவளது சகோதரனின் வயதைப்போல் இருமடங்காகும். அவள் தனது சகோதரனை விட 7 வருடம் இளையவள். ஆனால் அவளது சகோதரியை விட 3 ஆண்டுகள் மூத்தவள். அவளது சகோதரியின் வயது 12வயது ஆக இருந்தால், அவளது தந்தையின் வயதுஎன்ன?

1) 30 ஆண்டுகள்
2) 44 ஆண்டுகள்
3) 45 ஆண்டுகள்
4) 50 ஆண்டுகள்

7) சச்சின் அணிலை விட 4 ஆண்டுகள் மூத்தவன். இவர்கள் இருவரின் வயதுகளின் கூடுதல் 20 எனில், சச்சினின் தற்போதைய வயது என்ன?

1) 14 வருடங்கள் 2) 12 வருடங்கள்
3) 16 வருடங்கள் 4) 18 வருடங்கள்

8) என்னுடைய வயது, என் தந்தையின் வயதைப்போல் 3 மடங்கு. 6 ஆண்டுகளுக்கு முன் என்னுடைய தந்தை 24 வயதாக இருக்கும்போது எனது சகோதரி பிறந்தாள். எனது சகோதரிக்கு 9 வயதாக உள்ள போது, எனக்கு எத்தனை வயதாகி இருக்கும்?

1) 13 வருடங்கள் 2) 12 வருடங்கள்
3) 11 வருடங்கள் 4) 10 வருடங்கள்

9) மூர்த்தி மற்றும் சேகரின் வயதுகளின் விகிதம் 3 : 2 மேலும் அவர்களின் வயது வித்தியாசம் 12 எனில், மூர்த்தியின் வயது யாது?

1) 23 2) 36
3) 34 4) 35

10) பாபுவின் வயது அவரது மகனின் வயதை விட 2 மடங்கு. 4 வருடங்களுக்குப் பிறகு இருவரின் வயதுகளின் கூடுதல் 68 எனில், தற்போது மகனின் வயது என்ன?

1) 10 2) 16
3) 8 4) 20